வேண்டுமோ சொல்லலாம். எதற்கு எடுத்தாலும் உண்ணாவிரதம் செய்வது, வேலை நிறுத்தம் செய்வது மாணவர்களுக்கு நல்லதல்ல. மாணவர்களுடைய நலனுக்கு உகந்ததல்ல.

சில மாதங்களுக்கு முன் ஒன்றிரண்டு மாணவர்கள் மிகத் தவறுதலாக நடந்து கொண்டார்கள் என்று செய்தி வந்தது. தகாறு வந்தது, பிறகு தீர்ந்தது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே தகாறு ஏற்பட்டது என்றால் உடனே அதை கவனிக்கக் கூடியவர்கள் கல்லூரி நிர்வாகிகள். அதற்கும் மேலே—கல்லூரிகள் என்றால் பள்ளிகளைப் போல அல்ல--கல்லூரிகள் பல்கலைக் கழகத்தினுடைய மேற்பார்வைக்கு உட்பட்டவை. பல்கலைக் கழகம்தான் அதைக் கவனிக்கவேண்டும். பிரின்ஸிபால் சரியாக நடந்து கொண்டாரா, இல்லையா, பிரின்ஸிபால் ராஜிநாமா செய்தாரா, ராஜிநாமா செய்துவிட்டு வேலையில் இருக்கிறாரா, அப்படி இருந்தால் இருக்கச் சொன்னது யார், என்பதையெல்லாம் பல்கலைக் கழகம் கவனிக்க வேண்டும். பல்கலைக் கழகம் கவனிக்கக்கூடிய நிலையிலே அரசாங்கம் இதைப்பற்றிச் சொல்லுவது என்றால், அத்து மீறித் தலையிடுவதாகக்கூட ஆகும். அதற்கு மேலும் நிலைமை சீர் அடையாமல் இருந்து அரசாங்கம் கவனிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அப்போதுதான் அரசாங்கம் தலையிட முடியும். இப்போது இதில் அரசாங்கம் செய்யக்கூடியது ஒன்றும் இல்லை. ஆகவே, இது அவசரப் பிரேரணைக்கு உரியது அல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: This is not a matter for an adjournment motion. Hence I withhold my consent to it.

III.—NOTICE UNDER RULE 57 FOR RAISING A DISCUSSION ON THE AGRICULTURAL SITUATION IN THANJAVUR DISTRICT.

MR. SPEAKER: The hon. Member Sri M. D. Thiagaraja Pillai has given notice of the following under Rule 57 of the Assembly Rules :—

"To raise a discussion on an urgent matter of administration, namely the agricultural situation in the Thanjavur district."

In the explanatory notes appended to the notice, he has given the following reasons for raising the discussion.

"(1) Due to failure of rains in the Thanjavur District, there has been complete failure of crops; the talady crop has completely withered and special remission should be given after proper inspection and assessment. Collection of the increased kist should also be postponed.

(2) Though the Government have fixed a fair price for paddy, it does not reach the villagers due to the commission agents paying them less than the price fixed and also the procurement should be done at the assembly points themselves and the producers should not be asked to bring his produce to the godowns which are far away.

(3) Though a number of filter points have been sunk, there are no engines available to test the yield and also to work the filter point wells as there is often a lot delay. The pipes for the filter points are also not available due to defective planning on the part of the officials.

(4) There is also a lot of delay in giving electricity supply at places where filter points have been provided with electric motor pumpsets.

(5) If the situation is to improve, the above administrative deficiencies have to be rectified with the least possible delay."

The notice raises more than one definite issue and is hence hit by rule 59 (i). Further, though the matter is of sufficient importance, it lacks urgency. The Member will have an opportunity to raise the matter in the course of the discussion on the Governor's Address. Therefore the notice is disallowed.

IV.—PRIVILEGE MATTER.

ISSUE OF AN ORDINANCE AFTER SUMMONING THE LEGISLATURE.

MR. SPEAKER: The next item is a matter of privilege given notice of by the hon. Member Sri M. Kalyanasundaram.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ம் தேதி மெட்ராஸ் எஸென்ஷியல் ஆர்ட்டிகிள்ஸ் கண்ட்ரோல் அண்ட் ரெக்விஸிஷனிங் ஆக்டின் காலத்தை நீடிப்பதற்காக அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய சபையைக் கூட்டுவதற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்ட பிறகு இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. நல்ல காரியத்திற்காக அவசரச் சட்டம் கொண்டு வருவதை நான் ஆட்சேபிக்கவில்லை. அவசரச் சட்டம் கொண்டு வரும் அதிகாரத்தை இவ்வளவு சாதாரண விஷயங்களுக்குப் பயன்படுத்துவது முறை ஆகாது என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்தச் சட்டத்தின் காலத்தை நீடிக்கவேண்டுமென்று டிஸம்பர் மாதத்தில் இலாகா எதிர்பார்த்திருக்க முடியும். எதிர்பார்த்து முன்னாலேயே கொண்டு வந்திருக்க முடியும். ஆனால் அந்த மாதிரி கொண்டுவரவில்லை. அப்படியே இருந்தாலும், அவ்வளவு அவசியமாக இருந்தால் சில தினங்களுக்கு முன்பாகவே சபையை வைத்துக்கொண்டு நிறைவேற்றியிருக்கலாம். இந்த மாதிரி செய்வது இது முதல் தடவை அல்ல. இதற்கு முன் பல தடவைகள் நடந்து சபையின் கவனத்திற்கு நான் கொண்டு வந்திருக்கிறேன். அவசரச் சட்டம் பிறப்பிக்கும் அதிகாரம் கவர்னருக்குக் கொடுத்திருப்பதை ஒரு சட்டத்தை நீடிக்க அந்த அதிகாரத்தை உபயோகப்படுத்துவது இந்தச் சபையை அலட்சியப்படுத்துவதாக ஆகும். இதிலே இலாகா தவறு இருந்தால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தப் பிரச்னையைச் சபை முன் கொண்டுவர விரும்புகிறேன். அதில் ஏதாவது